**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 150 | of | 2016 |

**2025-ம் ஆண்டு ஜுலை திங்கள் 16-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **பழனி** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-16.07.2025**

**வா.சா.-1**

**2 ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு நான் அசல் ஆவணங்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் போடப்பட்ட பிறகு நான் ஆவணங்களின் ஜெராக்ஸ் நகல்களை வாங்கி பார்த்தேன். நான் ஜெராக்ஸ் நகல்களை பார்த்துவிட்டு அவர்களிடமே கொடுத்துவிட்டேன். கிரய ஒப்பந்தம் போடும்போது பட்டா யார் பெயரில் இருந்தது என்று நான் பார்த்து தெரிந்து கொள்ளவில்லை. கிரய பத்திரம் பதிவு செய்வதற்கு முன்பு நான் வில்லங்க சான்றிதழ் வாங்க என் மாமா திருஞானம் விண்ணப்பித்தார். ஆனால் தடை

உத்தரவு உள்ளதாக சொல்லி வில்லங்க சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார்கள். அவ்வாறு மறுத்துவிட்டார்கள் என்பதற்கு கடிதம் எதுவும் தரவில்லை. நான் வில்லங்க சான்றிதழ் வாங்கி பார்க்க எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. கிரயம் பதிவு செய்வதற்கு முன்பு நான் சான்றிடப்பட்ட தாய் பத்திரங்களை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பெறவில்லை என்றால் சரிதான். 18.11.2015 அன்று கிரயம் ஒப்பந்தம் போடப்பட்டது. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 12.06.2006 அன்றே செட்டில்மண்ட் பத்திரம் எழுதி வைத்து விட்டார் என்றால் சரிதான். ஆனால் பின்னிட்டு அது ரத்து செய்யப்பட்டுள்ளது. 18.11.2015 ஒப்பந்தத்திற்கு முன்பே செட்டில்மண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது. நான் 1ம் பிரதிவாதியிடம் ரூ.3 லட்சம் தொகை கொடுத்தேன். கிரய ஒப்பந்தத்தில் 3 மாத கால அவகாசம் சொல்லப்பட்டுள்ளது. 16.02.2016 அன்று நான் கிரயம் பெற தயாராக இருப்பதாக சொல்லி கிரய பத்திரம் எழுதித்தருமாறு அறிவிப்பு கொடுத்தேன். 16.02.2016 அன்று வழக்கறிஞரை சென்று பார்த்தேன். வழக்கறிஞர் 18.02.2016 அன்று அறிவிப்பு அனுப்பியுள்ளார். 1ம் பிரதிவாதி எனக்கு பதில்அறிவிப்பு கொடுத்தார். 24.02.2017 அன்று பதில் அறிவிப்பு கொடுத்தார். அந்த பதில் அறிவிப்பை படித்துப் பார்த்தேன். அந்த பதில் அறிவிப்பை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த பதில் அறிவிப்பில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இந்த வழக்கில் 1ம்பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதை நான் படித்துப் பார்க்கவில்லை. அந்த பதில் அறிவிப்பிலும் எதிர் வழக்குரையிலும் 1ம்பிரதிவாதி வழக்கு

சொத்து தன்னுடைய சுயார்ஜித சொத்து சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி சொத்து தன்னுடையது என்றும், தான்தான் ஒப்பந்தம் போட்டு இருப்பதாகவும் முன்பணம் பெற்றிருப்பதாகவும் மீதி தொகை தனக்கே சேர வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சொத்திற்கும் 2,3 பிரதிவாதிகளுக்கும் இடையே எந்த சம்மந்தமும் இல்லை என்று 1ம்பிரதிவாதி சொல்லியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் ஒப்பந்தத்தில் மூவரும் கையொப்பமிட்டுள்ளனர். 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பிலும் எதிர் வழக்குரையிலும் கிரய ஒப்பந்தத்தில் தான்மட்டுமே கையொப்பம் இட்டதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. 3 மாத கால அவகாசம் முடிவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு 1ம்பிரதிவாதியிடம் சென்று நான் கிரய பதிவு செய்து தருமாறு கேட்டேன். நான் கேட்டதும் 1ம் பிரதிவாதி பத்திரம் பதிவு செய்து தருவதாக என்னிடம் சொன்னார்.

வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu
Date: 2025.07.17 10:08:30 +0530